Anti-Racism Policy

Information for parents and carers

# இனவெறி எதிர்ப்புக் கொள்கை

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

மாணவ-மாணவியரது பொதுநலன், பாடசாலை நடவடிக்கைகளில் அவர்களது ஈடுபாடு மற்றும் கல்வியில் அவர்களுக்குக் கிடைக்கும் பலாபலன்கள் அகியவற்றின் மீது, இனவெறிச் செயல்கள் தாக்கத்தினை ஏற்படுத்தும். இனவெறியும், இனவெறித் தனமான நடத்தையும் NSW மாநிலப் பொதுப் பாடசாலைகளில் சகித்துக்கொள்ளப்படுவதில்லை.

### இந்தக் கொள்கை எதைப் பற்றியது?

Anti-Racism Policy (இனவெறி எதிர்ப்புக் கொள்கை) என்பது பாடசாலைச் சூழல்களில் மரியாதையையும், நல்லிணக்கத்தையும் ஊக்குவிக்கிறது. மாணவ-மாணவியரது கலாச்சாரம், மொழி அல்லது சமயப் பின்புலம் எதுவாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் கிடைக்கும் கல்வி வாய்ப்புகள் நியாயமானவையாக இருப்பதை உறுதிப்படுத்துவது இதன் நோக்கம். இந்தக் கொள்கையானது:

- ஆபொரிஜினிப் பூர்வகுடி மக்கள் மீது இனவெறி ஏற்படுத்தும் தாக்கத்தினைக் கருத்தில் கொள்கிறது
- அனைத்து மாணவ-மாணவியரிடமிருந்தும் பாடசாலைகள் பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளன என்பதையும், அவர்களுடைய கலாச்சாரம், சமயம் அல்லது மொழிப் பின்புலங்களின் காரணமாக எவ்வொரு குழுவினரும் அவர்களது முழுத் திறன்களைச் சாதிப்பதிலிருந்து தடுக்கப்படமாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகிறது
- பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த அனைவரையும் அவர்களுடைய சொந்த நடத்தை-முறைகளைப் பற்றி யோசிக்குமாறும், அவர்களுடைய நடவடிக்கைகளின் காரணமாக மற்றவர்கள் இனவெறிக்கு ஆளாகமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் வேண்டுகிறது
- இனவெறியைத் தடுப்பதில் தமக்குள்ள பொறுப்புகளை அனைத்து ஊழியர்களும் விளங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காகப் பயிற்சி ஒன்றைப் பூர்த்தி செய்யுமாறு அவர்களை வேண்டுகிறது
- பயிற்சி பெற்ற 'இனவெறி எதிர்ப்புத் தொடர்பு அதிகாரி' (Anti-Racism Contact Officer) ஒருவரை அமர்த்துமாறு ஒவ்வொரு பாடசாலையையும் வேண்டுகிறது.

### 'இனவெறி எதிர்ப்புத் தொடர்பு அதிகாரி' (Anti-Racism Contact Officer) என்பது யார்?

'இனவெறி எதிர்ப்புத் தொடர்பு அதிகாரி' (Anti-Racism Contact Officer (ARCO)) என்பவர், இனவெறி எதிர்ப்புக் கல்வியைப் பாடசாலையில் நடாத்த உதவுவதற்காகப் பாடசாலை அதிபரால் நியமிக்கப்படும் ஒரு ஆசிரியராவார். பின் வருவனவற்றை அளிப்பதன் மூலமாக ARCO பாடசாலை அதிபருக்கு உதவுவார்:

- மாணவ-மாணவியரது கல்வி மற்றும் பொது நலன் மீது இனவெறி ஏற்படுத்தும் தாக்கத்தினைப் பற்றிய புரிதலைப் பாடசாலை ஊழியர்கள் வளர்த்துக்கொள்வதற்கான உதவி
- இனவறிச் செயல்களைக் கண்ணுறும் பொழுது, அல்லது அவற்றைப் பற்றிக் கேட்கும் பொழுது மாணவ-மாணவியரும் ஊழியர்களும் என்ன பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றிய அறிவுரைகளை அவர்களுக்கு அளித்தல்
- இனவெறி குறித்த நடவடிக்கைகளைப் பாடசாலை நடைமுறைப்படுத்துவதற்கான யுக்திகளைப் பற்றிய அறிவுரை

இனவெறியைப் பற்றிய complaints (புகார்கள்)-இற்குத் தீர்வு காண்பதற்கான செயல்பாட்டு-முறைகளைப் பற்றிய அறிவுரைகளை பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள், மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ-மாணவியர் ஆகியோருக்கு அளிப்பதற்கான பயிற்சியை ARCO பெற்றிருப்பார். வேண்டப்பட்டால், புகார்களுக்குத் தீர்வு காண்பதற்கான செயல்முறைகளின் பொழுது ARCO-வினால் support person or advocate (ஆதரவுதவியாளர் அல்லது பரிந்துரைப்பாளர்) என்ற வகையிலும் செயல்பட இயலும்.

## பாடசாலையில் என் பிள்ளை இனவெறிக்கு ஆளானால் நான் என்ன செய்யவேண்டும்?

பாடசாலையில் உங்களுடைய பிள்ளை இனவெறிக்கு ஆளானால், ஆசிரியர் ஒருவருக்கு, அல்லது பாடசாலையின் ‘இனவெறி எதிர்ப்புத் தொடர்பு அதிகாரி’(Anti-Racism Contact Officer) க்கு அதைத் தெரியப்படுத்துமாறு நீங்கள் அவரை ஊக்குவிக்கவேண்டும், அல்லது அவர் சார்பாக நீங்கள் அதைத் தெரியப்படுத்தலாம்.

## பாடசாலையில் இடம்பெறும் இனவெறியைப் பற்றிய புகார் ஒன்றை நான் எவ்வாறு செய்வது?

பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள், அத்துடன் ஊழியர்கள் மற்றும் மாணவ-மாணவியர் ஆகியோர் உள்ளடங்க, பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த எவரொருவரும் make a complaint (புகார் ஒன்றைச் செய்யுங்கள்) -இல் புகார் ஒன்றை செய்யலாம். இனவெறிச் செயல்களைப் பற்றிய புகார்களைப் பாடசாலை அதிபர்கள், ‘இனவெறி எதிர்ப்புத் தொடர்பு அதிகாரி’(Anti-Racism Contact Officer)கள், அல்லது ஊழியர்கள் ஆகியோரில் எவரொருவரிடமும் செய்யலாம். School Community and Consumer Complaint Procedure (பாடசாலை சமூகத்தினர் மற்றும் சேவை-நுகர்வோர் புகார் செயல்பாட்டுமுறை)-இல் விளக்கிச் சொல்லப்பட்டுள்ளவாறு இனவெறி பற்றிய புகார்கள் கையாளப்படும்.

## இணையம் மூலமான இனவெறி குறித்து என்ன செய்வது?

தனிப்பட்ட மாணவ-மாணவிகள், அல்லது கலாசாரக் குழுக்களுக்கு எதிராக இணையத்தில் இடம்பெறும் பாடசாலை சம்பந்தப்பட்ட இனவெறிச் செயல்களை மேலே சொல்லப்பட்டுள்ளவாறு பாடசாலைக்குப் புகார்ப்படுத்த வேண்டும். இணையத்தில் பாதுகாப்பாக இருப்பது எப்படி என்பதைப் பற்றிய அறிவுரைகளுக்கு eSafety Commissioner website (eSafety ஆணையர் வலைத்தலம்)-இலுள்ள Online safety (இணையப் பாதுகாப்பு)-ஐப் பாருங்கள்.

## மேலதிகத் தகவல்களை நான் எங்கிருந்து பெறலாம்?

மேலதிகத் தகவல்களுக்கு Anti-racism education (இனவெறி எதிர்ப்புக் கல்வி)-யைப் பாருங்கள்.

## மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி

பாடசாலையுடன் பேசுவதில், அல்லது ஊழியர் ஒருவருடன் சந்திப்புவேளை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், 131 450 எனும் இலக்கத்தில் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’(Telephone Interpreter Service)யை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.

பாடசாலையினது தொலைபேசி இலக்கத்தைத் தொலைபேசி இயக்குநருக்குக் கொடுங்கள், அவர் பாடசாலையை அழைத்து உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார்.

பாடசாலை ஊழியர்களுடனான சந்திப்புகளின் பொழுது மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், ஒருவரை ஏற்பாடு செய்யுமாறு பாடசாலையினைக் கேளுங்கள். தலத்திற்கு வருகை தரும், அல்லது இணைய-வழியிலான அல்லது தொலைபேசி மூலமான மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை, கிடைப்பைப் பொறுத்து, பாடசாலை ஏற்பாடு செய்யும். மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.